www.ecourtsindia.com



**நான்காவது கூடுதல் சார்பு நீதிமன்றம் ,கோயமுத்தூர்**

நாள் : 06.02.2024

அ.வ.எண் : 697/2016

(சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.)

DW1 - காளிச்சாமி த/பெ. குஞ்சனமுதலியார்

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். சக்திவேலும் நானும் ஒரே ஊர்க்காரர்கள் மற்றும் உறவினர்கள் ஆவோம். சக்திவேல் என்ன படித்துள்ளார் என்று எனக்கு தெரியாது. சக்திவேலுக்கு என்னென்ன சொத்துக்கள் எவ்வளவு மதிப்பில் உள்ளன என்ற விபரம் எனக்கு தெரியாது. சக்திவேல் வருமான வரி செலுத்தி வருகிறாரா என்றால் அவ்வாறு செலுத்தி வருவதாக தெரியவில்லை. நான் வருமான வரி செலுத்துவதில்லை. நான் அரசு போக்குவரத்துக்கழக ஊழியர் ஆக இருந்து 2018 ஜனவரி மாதம் ஓய்வு பெற்றேன். இந்த வழக்கு போக வேறு எந்த வழக்கும் நான் தாக்கல் செய்யவில்லை. சொத்து வாங்குவதற்காக எங்களது போக்குவரத்துக் கழகத்திலிருந்தோ அல்லது மூன்றாம் நபர்களிடம் இருந்தோ கடன் எதுவும் பெறவில்லை. சொத்து வாங்கியதாக சொல்லப்படும் தினத்திலோ அல்லது அதற்கு முன்போ கிரைய தொகைக்கான முழு தொகை எனது வங்கி கணக்கில் இருந்ததாக தெரிவித்து ஆவணங்கள் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை, 2007 ம் ஆண்டு வீடு கிரையம் செய்து கொடுத்திருந்தேன். இவ்வழக்கில் கிரையம் வாங்கியதாக சொல்லப்படும் ஆண்டு 2013 என்றால் சரிதான். வீடு எவ்வளவு மதிப்புடையது யாருக்கு எந்த தேதியில் எவ்வளவு மதிப்பிற்கு விற்பனை செய்தேன் என்றால் சரியாக நியாபகம் இல்லை. வீடு விற்பனை செய்த விபரங்களை நான் என் எதிர் வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. வீடு விற்பனை செய்ததற்கான ஆவணங்கள் தாக்கல் செய்ய இயலுமா என்றால் 17 ஆண்டுகள் முன்னர் என்பதால் தாக்கல் செய்ய இயலாது. அந்த ஆவணங்களை சான்றிட்ட நகல்



This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNCB080010742016/truecopy/order-13.pdf

www.ecourtsindia.com



தாக்கல் செய்து வாங்க இயலும் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வீட்டை விற்று வந்த பணத்தை வங்கியில் வைப்பீடு செய்து வைத்திருந்தேனா என்றால் இல்லை, குழந்தைகளின் படிப்பு செலவிற்காக செலவு செய்தேன். வீடு விற்பனை செய்து அந்த பணத்தை வைத்து தாவா சொத்தை வாங்கினேன் என்று பொய்யுரைக்கிறேன் என்றால் சரியல்ல. 2013 ம் வருடம் தாவா சொத்தின் வழிகாட்டி மதிப்பு ரூபாய் 4 லட்சத்தி 53 ஆயிரம் ஆகும். சந்தை மதிப்பு எவ்வளவு என்றால் அதே தொகை தான். பொதுவாக சந்தை மதிப்பை விட வழிக்காட்டி மதிப்பு மிக குறைவாக இருக்கும் என்றால் அது பற்றி தெரியாது . எனக்கு ஒரு மகனும் ஒரு மகளும் உள்ளனர். எனது மகளுக்கு 2019 ம் வருடம் திருமணமாகிவிட்டது. எனது மகள் MCA படித்துள்ளார். எனது மகன் B.E (Civil) படித்துள்ளார். 2013 ம் வருடம் எனது மாத ஊதியம் எவ்வளவு என்றால் சுமார் 30 ஆயிரம் இருக்கும். அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்ய இயலுமா என்றால் இயலாது. எனக்கு என்னென்ன சொத்துக்கள் உள்ளது என்றால் காலி மனையிடம் 5 செண்ட் உள்ளது. வாடகை வீட்டில் தான் குடியிருக்கிறேன். 2013 ம் ஆண்டு மாத வாடகை எவ்வளவு செலுத்தி வந்தேன் என்றால் மாதம் ரூபாய் 3 ஆயிரம் செலுத்தி வந்தேன். 1 ம் பிரதிவாதி மோகன் குமார் தாவா சொத்தை 07.07.2010 அன்று வாசாஆ 1 மூலமாக கிரையம் பெற்றார் என்றால் சரிதான். அந்த பத்திரம் பிழையாக இருந்ததால் அந்த பிழை திருத்தத்திற்காக வாசாஆ 2 பிழை திருத்தல் ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். 14.04.2016 அன்று வாதி எனக்கும் மற்ற பிரதிவாதிகளுக்கும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான், அதை நான் வாங்கியுள்ளேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் வாசாஆ 9 தான் மேற்குறிப்பிட்ட சட்ட அறிவிப்பை நான் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டை என்றால் சரிதான். மேற்படி சட்ட அறிவிப்பிற்கு நான் பதில் கொடுத்தேனா என்றால் மோசடி வழக்கு என்று பதிலளிக்கவில்லை. அந்த அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை என்பதால் தான் பதிலளிக்க பயந்து



This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNCB080010742016/truecopy/order-13.pdf

பதிலளிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கிரையம் செய்த போது எவ்வளவு ரூபாய்க்கு முத்திரை தாள் வாங்கப்பட்டது என்றால் எனக்கு சரியாக நியாபகம் இல்லை. பதிவு கட்டணமாக எவ்வளவு தொகை செலுத்தப்பட்டது என்றால் நியாபகம் இல்லை. சாட்சியம் அளிப்பதற்கு முன்பு அந்த ஆவணங்களை படித்துப் பார்த்து தான் வந்தேன். (சாட்சி தாமாகவே அந்த ஆவணங்கள் எதுவும் என்னிடம் இல்லை என்று கூறுகிறார்). பத்திரங்கள் பதிவு செய்யப்பட்டதற்கான நகல்களை நான் வைத்திருக்கிறேன் என்றால் இல்லை. நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ஆவணங்களை ஒரு நகல் எடுத்து வைத்துள்ளேனா என்றால் வைத்துள்ளேன். அந்த ஆவணங்களை படித்துப் பார்த்த பிறகு தான் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். என்னுடைய வழக்கு படி அரசு பணியில் ஓட்டுநராக பணியாற்றியது தவிர வேறு வருமானம் எதுவும் கிடையாது என்றால் சரிதான். நான் பணியில் இருக்கும் போது சொத்துக்கள் வாங்கும்போது போக்குவரத்துத் துறையில் அனுமதி பெற்றுதான் சொத்துக்கள் வாங்க வேண்டும். (சாட்சி தாமாகவே PF ல் இருந்து லோன் வாங்க வேண்டும் என்றால் தான் அனுமதி பெற வேண்டும், இல்லையென்றால் அனுமதி தேவையில்லை என்று கூறுகிறார்) அவ்வாறு அனுமதி எதுவும் நான் பெறவில்லை என்றால் சரிதான். மாதம் 30 ஆயிரம் ரூபாய் ஊதியம் வாங்கியிருந்தால் ஆண்டுக்கும் ரூபாய் 3 லட்சத்தி 60 ஆயிரம் வரும் என்றால் சரிதான். 2013 ஆம் வருடம் ஒரு லட்சத்திற்கு மேல் ஆண்டு வருமானம் இருந்தால் வருமான வரி செலுத்த வேண்டும் என்றால் பிஎப், டியூசன் கட்டணம், எல்ஐசி, ஆகியவற்றை அந்த தொகை கழித்துவிட்டு மீத தொகை தான் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும். மாதம் ரூபாய் 14 ஆயிரம் மட்டுமே கையிருப்பு கிடைக்கும். எனக்கு வருமான வரி இருக்கிறது என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யுரைக்கிறேன் என்றாலும் சரியல்ல. 2013 ம் ஆண்டு சக்திவேலுக்கு தாவா சொத்தை வாங்கும்போது அவரிடம் போதிய பணம் இருந்ததா என்று எனக்கு தெரியாது. கிரையம் பெற்ற சமயத்தில் என்னிடமோ அல்லது சக்திவேலிடமோ கிரையத் தொகைக்கான போதிய பணம் இருந்ததற்கான



This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNCB080010742016/truecopy/order-13.pdf

www.ecourtsindia.com

ஆவணங்கள் எதுவும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை. நான் கூறியதன் அடிப்படையில் எனது மாத ஊதியம் எனது குடும்ப செலவிற்கே போதாது என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி எனக்கும் 2ம் பிரதிவாதிக்கும் இந்த வழக்கு கிரைய ஒப்பந்தத்திலிருந்து தப்புவதற்காகவும் நானும் சக்திவேலும் 1ம் பிரதிவாதியான மோகன் குமாரிடம் வட்டி வரவு செலவு வைத்திருந்த காரணத்திற்காகவும் கிரையம் செய்தததால் தான் சந்தை மதிப்பு எவ்வளவு என்றும் முத்திரைத் தாள் மதிப்பு எவ்வளவு என்றும் பதிவு கட்டணம் எவ்வளவு என்றும் என்னால் சரியாக கூற இயலவில்லை என்றால் சரியல்ல, 11 ஆண்டுகள் ஆகிவிட்டன. அந்த கிரைய ஆவணமே எனது பெயருக்கும் சக்திவேல் பெயருக்கும் பெயர் அளவில் 1ம் பிரதிவாதி ஏற்படுத்தியதால் தான் சொத்து பற்றிய எந்த விபரமும் ஆவணங்கள் பற்றிய விபரமும் என்னால் சொல்ல இயலவில்லை என்றால் சரியல்ல.கிரைய ஆவணத்தை தயாரித்த பத்திர எழுத்தர் பெயர் ரேணுகா தேவி ஆகும். அவர் தான் தற்போதும் எனது பத்திரங்களை தயார் செய்து கொடுப்பாரா என்றால் கிரையம் செய்த தேதியில் அவர் தயார் செய்து கொடுத்தார். 4ம் பிரதிவாதி லதா என்னிடம் கிரையம் வாங்கினார் அவரை அதற்கு முன் தெரியாது, காலம் சென்ற ரங்கசாமி (mediator) இடைத்தரகர் தான் அறிமுகம் செய்து வைத்தார். லதாவிற்கு இடம் விற்பனை செய்வதற்கான ஏற்பாடுகளை அவரது கணவர் கணேஷ் செய்தார். கணேஷ் எனக்கு முன்னரே பழக்கமானவரா என்றால் இடம் வாங்கியதற்கு பிறகு தான் பழக்கம். நானும் சக்திவேல் மற்றும் கணேஷ் ஆகியோரும் கூட்டாக சேர்ந்து அன்னூரில் பைனான்ஸ் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல, அன்னூரில் மூணு முக்கு ரோட்டில் வடக்கு பார்த்த காம்ப்ளக்ஸில் எங்கள் பைனான்ஸ் அலுவலகம் உள்ளது என்றால் சரியல்ல. லதாவின் பெயரில் 11.12.2015 அன்று கிரையம் செய்யப்பட்டது. அப்போது கிரையத் தொகையாக ரூபாய் 4 லட்சத்தி 50 ஆயிரம் பெற்றுக்கொண்டு கிரையமும் சுவாதீனமும் கொடுத்தோம், சந்தை மதிப்பு மற்றும் வழிக்காட்டி மதிப்பு என்ன என்று தெரியவில்லை. 1ம் பிரதிவாதி பெயர் அளவில்



This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNCB080010742016/truecopy/order-13.pdf

www.ecourtsindia.com

ஆவணங்கள் ஏற்படுத்தி வைத்திருந்ததால் தான் லதாவிற்கு செய்த கிரையத்தின் போது உள்ள சந்தை மதிப்பு மற்றும் வழிக்காட்டி மதிப்பு எனக்கு தெரியவில்லை என்று சொன்னால் சரியல்ல. லதாவின் கிரையப் பத்திரத்தை தயார் செய்த பத்திர எழுத்தர் ரேணுகா தேவி ஆவார். வாதி ஈஸ்வரன் இவ்வழக்கில் தாக்கல் செய்த வாசாஆ 3, ஒப்பந்த சான்றாவணத்தை பார்த்தேனா என்றால் மோசடி சான்றாவணத்தை பார்த்தேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் வாசாஆ 3 ஆவணத்தில் உள்ள 2 இலக்கமிட்டவர் என்ற இடத்தில் மோகன் குமார் கையொப்பம் செய்துள்ளாரா என்றால் இல்லை. மேற்படி வாசாஆ 3 ஆவணத்தில் போடப்பட்டுள்ள கையொப்பம் 1ம் பிரதிவாதியுடையதல்ல என்று குறிப்பிட்டு எனது பதில் வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் தெரியவில்லை. வாதி 1ம் பிரதிவாதியின் கையொப்பத்தை வாசாஆ 3 ஆவணத்தில் போலியாக போட்டுள்ளார் என்று எனது எதிர் வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் உள்ள விபரங்கள் பற்றி தெரியும். எதிர் வழக்குரையில் எந்த இடத்தில் வாதி 1ம் பிரதிவாதியின் கையொப்பத்தை மோசடி செய்தும் வழக்கு தாக்கல் செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் எனக்கு ஆங்கிலம் படிக்க தெரியாது.

**வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது .**

ஒம்/- B.S. கலைவாணி,

நான்காவது கூடுதல் சார்பு நீதிபதி,

// உண்மை நகல் //

கோயமுத்தூர்.

**OS 697/2016 06.02.2024**

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNCB080010742016/truecopy/order-13.pdf

www.ecourtsindia.com